**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **K. விஜயன்** | **S.S. சுப்பிரமணியன்** | **E. அந்தோணி** |

நாள்: **07/12/2015**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : தமிழகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பைச் சார்ந்த தொழிலாளர்கள் தங்களது ஒரு நாள் ஊதியத்தை நிவாரண நிதியாக தமிழக அரசுக்கு அளிப்பது - சம்மந்தமாக.**

தமிழகத்தில் கடந்த 10 தினங்களாக பெருமழை பெய்து வருகிறது தொடர்ச்சியாக பெய்துவருகின்ற பெரு மழையினால் ஏரிகள், கால்வாய்கள் உடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளிலே பாதிப்புகளை உருவாக்கி உள்ளது. சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்துள்ளனர். பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

பெய்த பெருமழையால் பல்லாயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். வீடுகள் பெரு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. பெருமழையால் பாதிக்கப்பட்டு, நிவாரணமுகாம்களில் உள்ளவர்கள் வீடு திரும்பும் போது குடும்பம் நடத்துவதற்குண்டான அடிப்படை பொருள்கள் அனைத்தையும் புதியதாக பெற்று வாழ்க்கையை தொடங்கிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தமிழகத்தில் கடந்த பத்து தினங்களாக பெய்து வரும் வரலாறு காணாத பெரு மழையால் தமிழகத்தில் குறிப்பாக சென்னை, கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, போன்ற மாவட்டங்களில் சாலைப் போக்குவரத்து, மின்சாரம், தொலைதொடர்பு போன்றவைகள் துண்டிக்கப்பட்டதோடு, நூற்றுக்கணக்கான பாலங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

பெய்த பெருமழையால் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்ய பலஆயிரம் கோடி ரூபாய் நிதி தேவைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெய்த பெருமழையால் மின்இணைப்பில் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்து உடனடியாக மின்சாரம் வழங்க தன்னலம் கருதாமல் இரவு பகல் பாராமல் மின்வாரிய ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மின்ஊழியர் மத்திய அமைப்பைச் சார்ந்த தொழிலாளர்கள் **ஒரு நாள் ஊதியத்தை அளிப்பது என முடிவு செய்துள்ளோம்.** அந்த அடிப்படையில் டிசம்பர் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்து தமிழக அரசிடம் அளித்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தமிழகத்தில் ஏற்பட்ட இழப்புக்கு ஒரு மாதம் வரைக்கூட காத்திராமல் மின்வாரிய ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை வாரிய நிதியில் இருந்து அளித்து பின்னர் ஊழியர்களிடம் இருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்பட்டுள்ள பேரிழப்பை ஈடுசெய்யும் வகையில் மின்ஊழியர் மத்திய அமைப்பைச் சார்ந்தவர்கள் ஒரு நாள் ஊதியத்தை அளிப்பதோடு இரவு பகல் பார்க்காமல் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| K. விஜயன் | S.S. சுப்பிரமணியன் | E. அந்தோணி |


நாள்: **07/12/2015**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.
ஐயா,

**பொருள் : தமிழகத்தில் வரலாறு காணாத பெருமழை - மின்வாரிய ஊழியர்களின் குடும்பங்களில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய முன்பணம் ரூபாய் 20,000/- வழங்க கோருதல் சம்மந்தமாக.**

கடந்த சில தினங்களாக தமிழகத்தில் பெய்த பெருமழையினால் மின்வாரிய ஊழியர்களுக்கு ஏற்பட்ட இழப்பை எதிர்கொள்ள மின்வாரிய ஊழியர்களுக்கு வட்டியில்லா முன்பணம் ரூபாய் 20,000/- வழங்குவது சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும், உடன் நடவடிக்கைக்கும் கொண்டு வரவிரும்புகிறோம்.

தமிழகத்தில் கொட்டிய மழையினால் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் விவரிக்க முடியாத இழப்புகள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகை, தூத்துக்குடி, போன்ற மாவட்டங்களில் பெய்த பெருமழையினால் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பலர் வீடுகளை இழந்துள்ளனர். விவசாயம் அழிந்தும், கால்நடைகள் மடிந்தும் வீட்டில் இருந்த பொருட்கள் உட்பட வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளது. பெய்த பெருமழையில் மின்வாரிய ஊழியர்கள் உட்பட பெரும் இழப்பை சந்தித்துள்ளனர். பலரின்

வீட்டில் வெள்ளம் புகுந்ததால் வீட்டு பொருள்கள் அடித்து செல்லப்பட்டதோடு இருக்கின்ற பொருட்களும் பயன்படுத்த முடியாத அளவிற்கு பாதிப்பை உருவாக்கி உள்ளது. வெள்ளம் வடிந்து வீடுகளுக்கு செல்லும் போது அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை புதியதாக வாங்கித்தான் குடும்பத்தை நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும் மழையின் பாதிப்புக்கு இடையிலேயே மின்வாரிய ஊழியர்கள் ஊடகங்கள் பாராட்டும் வகையில் பணியாற்றி பழதுகளை சரிசெய்து மின்இணைப்பை வழங்கி வருவது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

இந்நிலையில் பெய்த பெரும் மழையினால் மின்வாரிய ஊழியர்களின் வீடுகளில் ஏற்பட்ட இழப்பை உடனடியாக சரிசெய்யும் வகையில் மின்வாரிய ஊழியர்கள் அனைவருக்கும் **ரூபாய் 20,000/-த்தை வெள்ள நிவாரண முன்பணமாக அளித்து இருபது தவணைகளில் பிடித்தம்செய்து கொள்ளும் வகையில் வெள்ள நிவாரண முன்பணத்தை வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**

எனவே, தலைவர் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து பெய்த பெருமழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் மின்வாரிய ஊழியர்கள் அனைவருக்கும் ரூ.20,000/-த்தை வெள்ள நிவாரண முன்பணமாக வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

தலைவர் **K. விஜயன்** | பொதுச் செயலாளர் **S.S. சுப்பிரமணியன்** | பொருளாளர் **E. அந்தோணி**

நாள்: **07.12.2015**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : தமிழகத்தில் பெய்த அடைமழை பெருவெள்ளம் மின் விநியோக கட்டமைப்பு பாதிப்புகளை சரிசெய்யவும் மின்வாரிய ஊழியர்களுக்கு அடிப்படை வசதியும், மும்மடங்கு ஊதியம் வழங்க கோருதல் - சம்மந்தமாக**

**பார்வை : வாரியக்குறிப்பாணை** CE/PLG&RC / SE/ RE& 1(D) EE/RE/A3/F NEM 2015/ D.774/ 15, **Dated 14.11.2015**

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை, வெள்ளப் பெருக்கால் மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிபார்க்கும் மின்வாரிய ஊழியர்களுக்கு மும்மடங்கு ஊதியமும், அடிப்படை வசதிகளையும் செய்து தரக்கோருதல் சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கும், அவசர நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகின்றோம்.

தமிழகத்தில் பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, தண்ணீர் தேக்கம் ஆகிய காரணங்களினால் துணை மின் நிலையங்கள், பில்லர் பாக்ஸ்கள் கேபில்கள், மின் கடத்தி ஒயர்கள் ஆகியவைகள் பழுதுபட்டு மின் இணைப்பு துண்டிப்பு, ஏற்பட்டதோடு மேற்கூறிய மின்விநியோக கட்டமைப்பு வெள்ளத்தால் சூழ்ந்துள்ளதால், மின் கசிவு ஏற்பட்டு, மின் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் எழுந்ததனால் வாரியமே மின் இணைப்பை துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மின் விநியோகம் தடைபட்டதனால் தொழிற்சாலைகள், விவசாயிகள், வணிகர்கள், அச்சகங்கள் பாதிக்கப்பட்டதோடு வீடுகளில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் நகரம் முழுவதும் இருளில் மூழ்கியது குடிநீர் இரைக்கும் மோட்டார்கள், தொலை தொடர்பு துண்டிப்பு போன்றவைகள் ஏற்பட்டு மனித வாழ்க்கையே ஸ்தபிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டதை

மின்வாரிய அதிகாரிகளும், ஊழியர்களும் உணர்ந்து, நீர்மட்ட அளவு குறைய, குறைய மின்சாரம் வழங்குவது, துணை மின் நிலையங்கள், கேபில்கள், மின் கடத்தி ஒயர்களில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்து மின்சாரத்தை வழங்குவதில் முன்னுரிமை கொடுத்து பணியாற்றினர்.

மின்வாரிய ஊழியர்கள் பெரும் மழை பாதிப்புக்களை சரி செய்து வருவதை தமிழக அரசு, மின் வாரிய அதிகாரிகள், ஊடகங்கள், சாதாரண மக்கள் உள்பட பாராட்டுகின்றனர்.

மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய, அப்பகுதி மின் விநியோக வட்ட ஊழியர்கள் ஈடுபட்டதோடு, சில மின் விநியோக வட்டங்களில் ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய வேறு மின் திட்டங்களில் இருந்தும் ஊழியர்கள் சென்று பழுது ஏற்பட்ட சுவடே இல்லாத அளவிற்கு பழுதுகளை சரிசெய்து பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு மின் வாரிய ஊழியர்களின் பணியும் ஒரு குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது.

இச்சூழ்நிலையில் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள மின்வாரிய ஊழியர்கள், மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைவருக்கும் **மும்மடங்கு ஊதியமும்** அவர்களுக்கு **தங்கும் வசதி, உணவு வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடு** போன்றவைகளை உடனடியாக செய்து தர வேணுமாய் கேட்டுக் கொள்கிறேம்.

மின் விநியோக வட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தண்ணீரிலும், சேற்றிலும் சென்று பணியாற்றி வரும் நிலையில் அவர்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகள் மற்றும் சேத்துப்புண், இவைகளுக்கு மருத்துவ உதவி தேவைப்படுவதால், ஆங்காங்கே டிவிசன், அல்லது சப்-டிவிசன் அலுவலகங்களில் மருத்துவ முகாம்கள் அமைத்து மருத்துவ வசதி செய்து தர வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து பெருமழையால் பாதிக்கப்பட்ட மின் விநியோக கட்டமைப்பு பழுதுகளை சரி செய்து மின் இணைப்புகளை வழங்குவதற்கு தன்னலம் பாராமல், இரவு பகலாக உழைத்திடும் மின் வாரிய ஊழியர்கள் அனைவருக்கும் மும்மடங்கு ஊதியமும், தங்கும் வசதி, உணவு போன்றவைகளையும் ஏற்பாடு செய்து தரவேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் உண்மையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்